# தஞ்சாவூர் மண்டலம்

# பெரம்பலூர் நகராட்சி

# 2023 – 2024 - ம் ஆண்டு

# நிர்வாக அறிக்கை

# பெரம்பலூர் நகராட்சி

அமைப்பும் மேலாண்மையும் :

1. அமைப்பு :–

அரசு ஆணை 805–ஆண்டு 1886-ன் படி ஊராட்சியாக அமைக்கப்பட்டது. அரசு ஆணை 874, நாள்.25.07.1946–ன் படி முதல் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் ந.க.எண்.4665/82/ஜே6 நாள்.24.02.1982–ன் படி தேர்வு நிலைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. பெரம்பலூர் நகராட்சியில் துறைமங்கலம், அரணாரை, ஆகிய இரண்டு துணை கிராமங்களை கொண்டும் 21 வார்டுகளை உள்ளடங்கிய நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியானது தேர்வுநிலை பேரூராட்சி அந்தஸ்திலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக 05.07.2004-ல் தரம் உயர்த்தப்பட்டு பின்னர் 15.11.2006 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், அதனைத் தொடர்ந்து அரசாணை எண்.59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.05.2023-ம் தேதி முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. பெரம்பலூர் நகராட்சியானது மாவட்ட தலைநகரில் அமைந்துள்ளது. பெரம்பலூர் மாவட்டம் 01.11.1995 -ஆம் ஆண்டு துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

| அரசாணை மற்றும் நாள் | நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட விபரம் |
|---|---|
| அரசாணை (நிலை) எண்.277, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 02.07.2004. | 05.07.2004 முதல் மூன்றாம் நிலை நகராட்சி |
| அரசாணை (நிலை) எண். 136, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 15.11.2006. | 15.11.2006 முதல் இரண்டாம் நிலை நகராட்சி |
| அரசாணை (நிலை) எண்.59 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.21.05.2023 | 02.05.2023 முதல் தேர்வு நிலை நகராட்சி |

பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட நிலப்பரப்பு பகுதிகள் விபரம்

| வ. எண் | கிராமஎண், பெயர் | நகராட்சி பகுதி புல எண்கள் | மொத்த புல எண்கள் | பரப்பளவு |
|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் தெற்கு | 1-234 | 234 | 735.70.0 |
| 2 | பெரம்பலூர் வடக்கு பகுதி | 101-334 | 234 | 792.52.5 |
| 3 | அரணாரை தெற்கு பகுதி | 78-154<br>326-393 | 55 | 161.91.5 |
| 4 | தொரமங்கலம் பகுதி | 1-33<br>113-126<br>129-149 | 66 | 161.91.5 |
| **மொத்தம்** | | | **589** | **2059.36.0<br>ஹெக்டர் (அ)<br>20.59 ச.கி.மீ** |

அறிக்கையாண்டில் இந்த எல்லைகளில் யாதொரு மாறுதலும் இல்லை. நகரத்தின் மொத்தப்பரப்பளவு 20.59 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 49648 இதில் ஆண்கள் 24659 பெண்கள் 24989.

பெரம்பலூர் தல வரலாறு

சிவபுராணங்களில் ஸ்ரீ பிரம்மபுரம் என்றும், வைணவ புராணங்களில் ஸ்ரீ பெரம்புலியூர் என்றும், சரித்திர நூல்களில் பெரும்பலூர் என்றும் விளங்கும் இத்தலத்தில் பாடல் பெற்ற ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. மேலும், சரித்திர புகழ்பெற்ற ஸ்ரீ மதுரகாளியம்மன் திருக்கோயில் இந்நகராட்சியிலிருந்து 6.00 கிலோ மீட்டர் தொலைவில் சிறுவாச்சூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சியிலிருந்து 17கி.மீ தொலைவில் செட்டிக்குளம் கிராமத்தில் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் உடனுரை காமாட்சி அம்மன் கோவில், பாலதண்டாயுதபாணி திருக்கோவில் அமைந்துள்ளது.

பெரம்பலூர் நகராட்சி அலுவலகம்

இந்நகராட்சியானது பேரூராட்சியாக இயங்கிய காலம் முதல் கடந்த 30 ஆண்டுகளுக்கு பின்னர் 2008-2009–ம் ஆண்டின் இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் (Infra gap filling fund) புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் பெரம்பலூர் வடக்கு கிராமபுல எண்.336/01ல்(வெங்கடேசபுரம் வார்டு எண்.11) கட்டப்பட்டு 15.10.2012 அன்று திறப்பு விழா செய்யப்பட்டு செயல்பட்டுவருகிறது. மேலும், தற்பொழுது அலுவலக பயன்பாட்டிற்கும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் சிறப்பான முறையில் அமைந்துள்ளது.

2. மக்கள் தொகை

| வ.எண் | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு | : | மக்கள் தொகை | ஆண் | பெண் |
|---|---|---|---|---|---|
| 1 | 1991 | : | 26541 | | |
| 2 | 2001 | : | 37631 | 19131 | 18500 |
| 3 | 2011 | : | 49648 | 24659 | 24989 |

நகரின் விரிவாக்கம், வளர்ச்சியின் வளர்ந்து வரும் மக்கள் தொகையின் அடிப்படையில் அறிக்கை ஆண்டில் சுமார் 70000 மக்கள் தொகை குறையாமல் உள்ளது. மேலும் தினசரி நகராட்சி பகுதிக்கு வந்து செல்லும் மக்களின் எண்ணிக்கை 20000–க்கும் குறையாமல் உள்ளது.

### 3. நகர்புற உள்ளாட்சி தேர்தல்

அரசாணை எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:16.09.2022 ன்படி 21 நகர்மன்ற உறுப்பினர்களுக்கான வார்டுகள் ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு

| வ.எண் | ஒதுக்கீட்டின் விவரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த வார்டுகள் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளின் விபரம் |
|---|---|---|---|
| 1. | பெண்களுக்கான பொது ஒதுக்கீடு | 8 | 1,2,3,4,7,11,12,18 |
| 2. | பட்டியல் வகுப்பு பெண்களுக்கான ஒதுக்கீடு | 3 | 9,16,19 |
| 3. | பட்டியல் வகுப்பிற்கான பொது ஒதுக்கீடு | 3 | 6,8,20 |
| 4. | பொது ஒதுக்கீடு | 7 | 5,10,13,14,15,17,21 |
| மொத்தம் வார்டுகள் | | **21** | |

### 4. நகர்மன்ற கூட்டங்கள்

அறிக்கையாண்டில் 01.04.2023 முதல் 31.03.2024 முடிய நகர்மன்ற கூட்டங்களும் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு.

| வ.எண் | கூட்ட விவரம் | கூட்ட எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் |
|---|---|---|---|
| 1. | சாதாரண கூட்டம் | 11 | 293 |
| 2. | அவசர கூட்டம் | - | - |
| 3. | சிறப்புகூட்டம் | - | - |
| மொத்தம் | | 11 | 293 |

### 5. நிர்வாக செயல்பாடுகள்

அறிக்கையாண்டில் பணிபுரிந்த ஆணையாளர்

| | | |
|---|---|---|
| 1. | 01.04 .2022 முதல் 18.07.2023 வரை | திரு. ஆர்.ராதா பி.இ.,<br>நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) |
| 2 | **19 .07.2023 முதல் 31.03.2024** வரை | திரு. வே.இராமா், பி.ஏ, பி.எல்.,<br>ஆணையாளர் |

நகராட்சி பொறியாளர்

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2022 முதல் 10.08.2023 தேதி வரை | திரு. ரா.ராதா, பி.இ.,<br>நகராட்சி பொறியாளர். |
| 2 | 11.08.2023 முதல் 31.12.2023 வரை | திரு.டி.சீமோன் முத்துராஜ் |
| 3 | 01.01.2024 முதல் 21.03.2024 வரை | திரு. பா.விஜய் கார்த்தி<br>நகராட்சி பொறியாளர் (பொ) |
| 4 | 22.03.2024 முதல் 31.03.2024 வரை | திரு.R. பாண்டியராஜ்,<br>நகராட்சி பொறியாளர் |

அறிக்கையாண்டில் பணிபுரிந்தவர்கள் மற்றும் பதவி

| | | |
|---|---|---|
| 1. | 01.04.2022 முதல் 31.03.2023 தேதி வரை | திரு.ப.முகம்மது ரபிவுல்லா, மேலாளர் |

கணக்கர்

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2023 முதல் 31.03.2024 வரை | திரு.ஆர். கனகராஜ், இளநிலை உதவியாளர்<br>மற்றும் கணக்காளர் (பொ) |

உதவி பொறியாளர்

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2023 முதல் 26.05.2023 தேதி வரை | திருமதி. என்.ஜெயமாலதி, உதவி பொறியாளர் |
| 2 | 16.03.2024 முதல் 31.03.2024 | திரு.கே.சரவணன், உதவி பொறியாளர் |

பொதுப்பணி மேற்பார்வையாளர்கள்

| | |
|---|---|
| 01.04.2023 முதல் 26.05.2023 வரை | திரு. ஆர். காசிநாதன் |
| 01.04.2023 முதல் 17.08.2023 வரை மற்றும்<br>16.02.2024 முதல் 31.03.2024 வரை | திருமதி.பி. தேவி |

பணி ஆய்வர்

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2023 முதல் 31.03.2024 தேதிவரை | திரு.ஆர். மாதவன் |

குழாய் பொருத்துநர்

| | | |
|---|---|---|
| 1. | 01.04.2023 முதல் 05.01.2024 தேதிவரை | திரு. எஸ்.குமார் |
| 2 | 16.11.2023 முதல் 31.03.2024 | திரு.எஸ்.சுரேஷ்கண்ணா |

நகரமைப்பு ஆய்வர்

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2023 முதல் 31.03.2024 தேதி வரை | திரு. மாணிக்கச்செல்வன் |

வருவாய் ஆய்வர்

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2023 முதல் 27.10.2023 வரை | திரு.க.திருச்சந்திரன், வருவாய் ஆய்வாளர் |
| 2 | 12.10.2023 முதல் 31.10.2024 வரை | திரு.கே. பார்த்திபன், வருவாய் ஆய்வாளர் |
| 3 | 27.10.2023 முதல் 12.02.2024 வரை | திரு. என். கந்தசாமி, வருவாய் ஆய்வாளர் |
| 4 | 12.02.2024 முதல் 31.03.2024 வரை | திரு.எஸ். கண்ணன், வருவாய் ஆய்வாளர் |

பொது சுகாதார துப்புரவு ஆயவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | 01.04.2023 முதல் 01.06.2023 வரை | திரு.சு.பன்னீர்செல்வம், துப்புரவு ஆய்வாளர் |
| 2 | 01.04.2023 முதல் 17.08.2023 வரை | திரு. ப. மோகன், துப்புரவு ஆய்வாளர் |
| 3 | 08.06.2023 முதல் 31.03.2024 | திரு. அ. சீனிவாசலு, துப்புரவு ஆய்வாளர் |

துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் களப்பணி உதவியாளர்

| | | |
|---|---|---|
| 1 | திரு. ப. விநாயகம் , து. ப. மே | 01.04.2023 முதல் 31.03.2024 வரை |
| 2 | திரு.ப.பாலசுப்ரமணியன், து.ப.மே | 24.04.2023 முதல் 31.03.2024 வரை |
| 3 | திரு.சு.ஆறுமுகம், து.ப.மே | 21.06.2023 முதல் 31.03.2024 வரை |
| 4 | திரு.மு.குமரவேல், து.ப.மே | 22.06.2023 முதல் 31.03.2024 வரை |
| 5 | திரு.ச.சபரிஸ், து.ப.மே | 22.06.2023 முதல் 31.03.2024 வரை |
| 6 | திரு.கோபிநாத், து.ப.மே | 29.09.2023 முதல் 31.03.2024 வரை |
| 7 | திரு.க.சடையன், து.ப.மே | 01.11.2023 முதல் 31.03.2024 வரை |
| 8 | திருமதி. அ. ஜெயந்தி<br>களப்பணி உதவியாளர் | 01.04. 2023 முதல் 31.03.2024 வரை |

துப்புரவு பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1 | துப்புரவு பணியிடங்கள் மொத்தம் | 22 |
| 2 | இறப்பு மற்றும் ஓய்வு காரணமாக காலியிடம் | 12 |
| 3 | குளக்காவலர் பணியிடம் | 02 (இதில் ஒரு பணியிடம் காலியாக உள்ளது) |

பொது நிர்வாக பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1 | மேலாளர் | 1 |
| 2 | கணக்காளர் | காலியிடம் |
| 3 | உதவியாளர் | 3 |
| 4 | இளநிலை உதவியாளர்கள் | 8(1 தற்காலிக பணி நீக்கம்) |
| 5 | தட்டச்சர் | 3(2 காலியிடம்) |
| 6 | உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| 7 | அலுவலக உதவியாளர் | 4(1 காலியிடம்) |
| 8 | பதிவறை எழுத்தர் | 1 |
| 9 | உதவி வருவாய் அலுவலர் | காலியிடம் |
| 10 | வருவாய் ஆய்வாளர் | 2 |
| 11 | வருவாய் உதவியாளர் | 8(1 தற்காலிக பணி நீக்கம்)<br>(1 காலியிடம்) |

**6. நிர்வாக செலவினம் பணியாளர்கள்**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஒய்வூதிய செலவினம் ரூ.**611.76** இலட்சம் ஆகும்.

நகராட்சி அறிக்கையாண்டின் செலவின விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பொது நிர்வாகம்<br>அ. ஊதியம்<br>ஆ. இதர இனங்கள் | : | 4,69,50,217/- |
| 2 | ஒய்வூதிய செலவு | : | 1,42,26,254/- |
| 3 | ஆப்ரேட்டிங் செலவு, பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் | : | 5,24,86,515/- |
| 4 | திட்டச் செலவு | : | 4,57,78,800/- |
| 5 | நிர்வாக செலவு | : | 75,27,489/- |
| 6 | குடிநீர் திட்ட பணிக்கு | : | 3,52,02,505/- |

**7. எழுது பொருள் மற்றும் படிவங்கள்**

நகராட்சியின் அன்றாட அலுவலக பணிகளுக்காக 21 கணிணி 15 பிரிணிடர்களும் பயன்பாட்டில் உள்ளது. அன்றாட பணிகளை மேற்கொள்ள தேவையான எழுதுபொருட்கள் மற்றும் படிவங்கள் அச்சடித்தல் வகையில் அறிக்கை ஆண்டில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8. நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | தனியார் கலைக் கல்லூரி | : | 1 |
| 2. | அரசினர் மேல்நிலைப் பள்ளி | : | 1 |
| 3. | தனியார் மேல்நிலைப் பள்ளி | : | 9 |
| 4. | நடுநிலைப் பள்ளி | : | 2 |
| 5. | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | : | 4 |
| | கூடுதல் | : | **17** |

அறிவு சார் மையம்

பொது நூலகம் :–

பெரம்பலூர் மாவட்ட தலைநகரில் அமைந்துள்ளதால் மாவட்ட மைய நுலகம் புதிய பேருந்து நிலையம் அருகாமையில் வார்டு எண்.08ல் அமைந்துள்ளது. மேலும், கிளை நூலகம் பழைய நகராட்சி அலுவலகம் அருகில் புளியங்குளம் ஏரிக்கரையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் வாசகர்கள் அதிகளவில் நூலகங்களில் பயனடைகின்றனர்.

9. சொத்துவரி :–

| | | | |
|---|---|---|---|
| 1. | மொத்த வரி விதிப்பு எண்கள் | : | 30580 |
| 2. | குடியிருப்பு | : | 24767 |
| 3. | வணிகம் | : | 5784 |
| 4. | சராசரியாக ஆண்டு வருமானம் | : | 692.62இலட்சம் |

10. தொழில் வரி:–

| வ. எண் | விபரம் | : | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | அரசு அலுவலகங்கள் | : | 236 எண்ணிக்கை |
| 2. | வணிக நிறுவனங்கள் | : | 2663 எண்ணிக்கை |
| 3. | சராசரியான ஆண்டு வருமானம் | : | 104.86 இலட்சம் |

**11. பல்வகை கேட்பு : புதிய , பழைய பேருந்து நிலையம் மற்றும் தினசரி நாளங்காடி மூலமாக கிடைக்கும் வருவாய் விபரம்**

பெரம்பலூர் நகராட்சியில் இரண்டு பேருந்து நிலையம் அமைந்துள்ளது. நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தில் புறநகர் பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள் நிறுத்தப்படுகிறது.

புதிய பேருந்து நிலையம் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து நகரின் நுழைவுப்பகுதியில் சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இது “B” வகைபாடு பேருந்து நிலையமாகும். பேருந்து நிலையத்தில் 29 பேருந்துகள் நிறுத்தம் செய்ய (Bus Pays) அமைக்கப்பட்டுள்ளன. இப்பேருந்து நிலையத்திற்கு தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பேருந்துகள் வந்து செல்கின்றன. பேருந்து நிலையத்தில் மூன்று கட்டண கழிப்பிடங்கள் இரண்டு இலவச சிறுநீர் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்திற்கு நாள் ஒன்றுக்கு சுமார் 400 பேருந்துகள் வந்து செல்கின்றன.

இந்நகராட்சியின் பழைய பேருந்து நிலையத்தில் 31 கடைகளும், தினசரி நாளங்காடியில் 150 கடைகளும் குத்தகைக்கு விடப்பட்டு நடப்பு ஆண்டில் கீழ்கண்டுள்ள விபரப்படி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

வருவாய் இனங்கள் பிரதி பலன் தரத்தக்கவை :–

| வ. எண் | விபரம் | மொத்த கடைகள் எண்ணிக்கை | சராசரி ஆண்டு வருமானம் |
|---|---|---|---|
| 1. | காமராஜர் பேருந்து நிலையம் பழைய பேருந்து நிலையம் கடைகள் மற்றும் வணிக வாளகம் மற்றும் முதல்தளம் கடைகள் | 48 | 2495280 |
| 3. | தினசரி மார்க்கெட் கடைகள் | 150 | 2601792 |
| 4. | தினசரி மார்க்கெட் வணிக வளாகம் | 10 | 452350 |
| 5. | புதிய பேருந்து நிலையம் (அறிஞர் அண்ணா பேருந்து நிலையம்) | 126 | 11601124 |
| 6. | பழைய நகராட்சி அலுவலகம் அருகில் உள்ள வணிக வாளகம் | 13 | 2345600 |
| 7. | மட்டன் ஸ்டால் கடைகள் | 4 | 314432 |

| | | | |
|---|---|---|---|
| 8. | கட்டண கழிப்பிடங்கள் | 5 | 771525 |
| 9 | பெரியார் சிலை அருகில் உள்ள கடைகள் | 4 | 167968 |
| 10 | தினசரி சந்தையில் சுங்கம் வசூலித்தல் | 1 | 510600 |
| 11 | புதிய பேருந்து நிலையம் சைக்கிள் நிறுத்துமிடம் | 1 | 637350 |
| 12 | வண்டிப்பேட்டையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 1 | 211680 |
| 13 | ஆடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1 | 105289 |
| 14 | பேருந்து நுழைவு கட்டணம் | 1 | 758851 |
| 15 | பேருந்து நிலையத்தில் ஒலிப்பெருக்கி விளம்பரம் | 1 | 19184 |
| | கூடுதல் | | **229,93,027** |

பேருந்து நிலையம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து ஒன்றுக்கு தினசரி கட்டணம் ரூ.12/- வீதம் குத்தகைதாரரால் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் அறிக்கை ஆண்டில் ரூ.758851- வருமானமாக இந்நகராட்சிக்கு கிடைத்தது.

**12. நகராட்சிக்கு சொந்தமான சாலைகள்**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சாலைகள் நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வரும் விபரம் கீழ்கண்டவாறு

**1. விவரம்**

| வ. எண் | சாலையின் தன்மை | சென்ற நிதியாண்டில் சாலையின் நீளம் (கிலோ மீட்டர்) | அறிக்கை ஆண்டில் சாலையின் நீளம் (கிலோ மீட்டர்) |
|---|---|---|---|
| 1. | சிமெண்ட் சாலை | 21.65 | 21.65 |
| 2. | தார் சாலை | 148.020 | 148.020 |
| 3. | பேவர் சாலை | 1.986 | 1.986 |
| 4 | மண் சாலை | 3.836 | 3.836 |

மேற்கண்டுள்ள சாலைகளின் பராமரிப்பிற்காக அறிக்கை ஆண்டில் **ரூ.2.50 கோடி** செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2. நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகள் :–**

நகராட்சியின் எல்லைக்குட்ப்பட் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட சாலைகள் 36.500 கிலோ மீட்டர் தூரம் அமைந்துள்ளது சாலைகளின் விவரங்கள் கீழ்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | தேசிய நெடுஞ்சாலை | : | 2.270 கி.மீ |
| 2. | திருச்சி சாலை | : | 3.00 கி.மீ |
| 3. | அரியலூர் சாலை | : | 3.300 கி.மீ |
| 4. | ஆத்தூர் சாலை | : | 4.00 கி.மீ |
| 5. | துறையூர் சாலை | : | 7.00 கி.மீ |
| 6. | வடக்குமாதவி சாலை | : | 7.00 கி.மீ |
| 7. | எளம்பலூர் ரோடு | : | 3.50 கி.மீ |
| 8. | விளாமுத்தூர் ரோடு | : | 3.500 கி.மீ |
| 9. | அரணாரை ரோடு | : | 3.500 கி.மீ |
| 10. | ஆலம்பாடி சாலை | : | 2.00 கி.மீ |
| 11. | மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலை | : | 3.500 கி.மீ |
| | கூடுதல் | : | **36.500 கி.மீ** |

**3. தெரு விளக்குகள் :–**

இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட 21 வார்டு பகுதியிலும் தெருவிளக்குகள் தேவையான அளவிற்கு அமைக்கப்பட்டுள்ளன மேலும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தெருவிளக்குகள் அமைந்துள்ள விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | 20 Walts LED | : | 3254 |
| 2. | 150-250 Walts S.V | : | 284 |
| 3. | உயர்மின் 400 Walts LED | : | 48 |
| 4. | 18-200 Walts LED | : | 741 |
| 5. | 20-85CFL | : | 605 |
| 6 | 90 Walts LED | : | 35 |
| கூடுதல் | | | **4967** |

**4. வடிகால் விபரம் :–**

இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் கழிவு நீர் வடிகால் 62.30 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைந்துள்ளது. மேலும், இவ்வடிகால் அனைத்தும் அன்றாடம் சுத்தம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பக்கா சாக்கடை | : | 6.83 |
| 2. | கச்சா சாக்கடை | : | 62.07 |
| | கூடுதல் | : | **68.90** |

**13. நீர் நிலைகள் மேம்பாடு :–**

பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட எல்லையில் அமைந்துள்ள நகராட்சி பராமரிப்பில் உள்ள குளங்கள் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | குளங்களின் விபரம் | : | விஸ்தீர்ணம் |
|---|---|---|---|
| 1. | புளியங்குளம் | : | 7.58 ஏக்கர் |
| 2. | அம்மா குளம் | : | 3.80 ஏக்கர் |
| 3. | வடக்கு தெப்ப குளம் | : | 2.80 ஏக்கர் (மொத்தம் 3 குளங்கள்) |

**14. பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம்**

தமிழக அளவில் இன்று மிக முக்கியமான பெரிய குடிநீர் திட்டமாக கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு, தமிழக அரசின் 20.04.1998–ம் தேதிய அரசாணை எண்.2489- ன்படி ரூ. 26.40 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் 2011- ஆம் வருட கணக்கெடுப்பின்படி 49648 எண்ணிக்கை மக்கள் தொகை உள்ளனர். மேற்படி திட்டம் 2025 – ஆம் ஆண்டு எதிர்பார்க்கும் மக்கள் தொகை 90000- க்கு கணக்கிட்டு குடிநீர் வழங்க ஆதாரம் கொள்ளிடம் ஆற்றில் தாளக்குடி என்ற இடத்தில் தலைமை நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு, நீர் சேகரிப்பு கிணறுகளிலிருந்து பிரதான குழாய்களின் மூலம் நீரேற்றப்படுகிறது.

பெரம்பலூர் நகராட்சிக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் தமிழக அரசு ஆணை எண்.2489, நாள்.20.04.1998-ன்படி கொள்ளிடத்திலிருந்து 55 வழியோர கிராமங்கள் உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர் திட்டம் அனுமதிக்கப்பட்டு, ரூ. 26.40 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு, பெரம்பலூர் நகராட்சிக்கு குடிநீர் சப்ளை செய்து வருகிறது. தற்போது தினசரி தனி நபருக்கு 104 லிட்டர் வீதம் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது.

**1. குடிநீர் விநியோகம் :–**

| | | | |
|---|---|---|---|
| 1. | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள்<br>(கொள்ளளவு **21.00** லட்சம் லிட்டர்) | : | 6 |
| 2. | வீட்டு குடிநீர் இணைப்புகள் | : | 9783 |
| 3. | வணிக விநியோக இணைப்புகள் | : | 180 |
| 4. | பொதுக் குழாய்கள் | : | 24 |
| 5. | ஆழ்குழாய் கிணறுகள் | : | 35 |
| 6. | திறந்த வெளிக் கிணறுகள் மின் மோட்டாருடன் அமைந்தது | : | 29 |
| 7. | ஆழ்குழாய் மின் மோட்டார்கள் | : | 135 |
| 8. | பகிர்மான குழாய்களின் நீளம் (கொள்ளிடம் குடிநீர்) | : | 172 |
| 10. | உள்ளூர் குடிநீர் விநியோகம்<br>( நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ) | : | **84** லிட்டர் |

2. குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படும் விபரம்:–

| குடியிருப்பு | வைப்புத் தொகை | கட்டணம் |
|---|---|---|
| வீட்டு குடியிருப்பு | ரூ.3000/- | ரூ.100/- ( 1 மாதத்திற்கு ) |
| வணிகம் | ரூ.10000/- | ரூ.400/- (1 மாதத்திற்கு) |
| தொழிற்சாலை | - இல்லை - | - இல்லை - |

3. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைந்துள்ள விபரம் (கொள்ளிடம் குடிநீர்)

| வ. எண் | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ள இடம் | லிட்டர் கொள்ளளவு ( இலட்சத்தில் ) | நாளொன்றுக்கு நீரேற்றப்படும் விபரம் |
|---|---|---|---|
| 1. | ஆலம்பாடி சாலை | 8.00 | இரு தடவை |
| 2. | அரணாரை | 1.50 | இரு தடவை |
| 3. | துறைமங்கலம் தீயணைப்பு நிலையம் | 3.00 | இரு தடவை |
| 4 | விளாமுத்தூர் சாலை | 5.00 | ஒரு தடவை |
| 5 | அசோக் நகர் | 2.50 | ஒரு தடவை |
| 6 | புதிய பேருந்து நிலைய கிணறு | 1.50 | ஒரு தடவை |
| கூடுதல் | | **26.00** | |

உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் மூலமாக அமைக்கப்பட்ட திறந்த வெளி கிணறுகள் விபரம்

| வ. எண் | குடிநீர் ஆதாரம் | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள இடம் | கொள்ளவு லிட்டரில் |
|---|---|---|---|
| 1 | திறந்த வெளி கிணறு | ஆலாம்பாடி | **800000** |
| 2 | திறந்த வெளி கிணறு | விளாமுத்தூர் | **500000** |
| 3 | திறந்த வெளி கிணறு | தீரன் நகர் OHT | 100000 |

| | | | |
|---|---|---|---|
| 4 | திறந்த வெளி கிணறு | சங்குபேட்டை - தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி | 100000 |
| 5 | திறந்த வெளி கிணறு | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் - தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி | 200000 |
| 6 | திறந்த வெளி கிணறு | ரோஸ் நகர் - தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி | 200000 |
| 7 | திறந்த வெளி கிணறு | துறைமங்கலம்- தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி | 200000 |

4. குடிநீர் விநியோகம் நேரடியாக குழாய் வழியாக வழங்கப்படும் விபரம்

| வ. எண் | குடிநீர் ஆதாரம் | குடிநீர் விநியோகம் செய்யும் பகுதி |
|---|---|---|
| 1. | திறந்த வெளி கிணறுகள் | 7,10,11,14, 15,16,17, மற்றும் 18 வார்டுகளுக்கு நேரடி விநியோகம் |

**15. பாதாள சாக்கடைத் திட்டம் :–**

அரசு ஆணை எண்.(3டி)9, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.18.04.2007–ல் பெரம்பலூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.23.83 கோடி மதிப்பீட்டில் பின்காணும் விபரப்படி செயல்படுத்த நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| அரசு மான்யம் | நகராட்சி பங்குத் தொகை | TNUDF – III | கட்டுமானத்தின் போது வட்டி |
|---|---|---|---|
| ரூ. 7.3 கோடி | ரூ. 5.37 கோடி | ரூ. 10.2 கோடி | ரூ. 0.96 கோடி |

பெரம்பலூர் நகராட்சி நகர்மன்றம் தீர்மான எண்.112/29.06.2007 – ல் மேலே காணும் விபரப்படி கடன் மற்றும் மான்யத் தொகையினை TNUIFSL நிறுவனத்திடம் பெற்று TWAD Board மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடை திட்டம் 2012-2013–ம் ஆண்டு முதல் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், நகரின் விரிவாக்கப்பகுதியில் கழிவுநீர் குழாய் அமைக்கப்படாத இடங்களை கண்டறிந்து ஒவ்வொரு நிதியாண்டிலும் குழாய்கள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் பொதுமக்களிடையே இத்திட்டமானது நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. தற்பொழுது கீழ்கண்டவாறு பாதாளசாக்கடை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குடியிருப்பு இணைப்பு | 12316 |
| 2 | வணிக இணைப்பு | 178 |
| | கூடுதல் | **12494** |

-

பாதாள சாக்கடை இணைப்பு பெற வைப்புத்தொகை செலுத்தும் விபரம் :–

| வ. எண் | வீட்டின் சதுர அடி | வைப்புத்தொகை | | மாதாந்திர கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | வீடு ரூ. | வணிகம் ரூ. | வீடு ரூ. | வணிகம் ரூ. |
| 1 | 500 சதுர அடி | 3000 | 6000 | 75 | 150 |
| 2 | 501 முதல் 1200 | 4000 | 12000 | 85 | 255 |
| 3 | 1200 முதல் 2400 | 5000 | 15000 | 100 | 300 |
| 4 | 2401 – மேல் | 6000 | 30000 | 120 | 600 |
| 5 | சிறப்பினம் | 30000 | | 140 | 1400 |

தகவல் தொழில்நுட்ப பிரிவு

பொது மக்களின் சேவைக்காகவும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை செலுத்துவதற்கு எளிமையாக்கி UTIS மென்பொருள் https://tnurbanepay.tn.gov.in இணையதளம் மூலம் துரித செயல்பாட்டிற்காகவும் பின்காணும் இனங்களுக்கான கட்டணங்கள் செலுத்தி சான்றுகள் பெறவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

1. பிறப்பு இறப்பு சான்றுகள்பெறுவதற்கும்
2. சொத்துவரி, தொழில்வரி வசூல் ரசீது வழங்குதல்.
3. வரியில்லா இனங்கள் வசூல் ரசீது வழங்குதல்.
4. சேவை மையம்.
5. கட்டிட உரிமம் பெறுவதற்கும் அதற்கான கட்டணங்கள் செலுத்துவதற்கும்.

6. உரிமக் கட்டணங்கள்.

7. குடிநீர் கட்டணம்

8. பாதாள சாக்கடை கட்டணம்

**16. பொதுசுகாதாரம்**

**1. பிறப்பு விகிதம் மகப்பேறு உதவியும்**

அறிக்கையாண்டில் சுகாதார ஆய்வரால் பிறப்பு, இறப்புகள் பதிவு செய்யப்பட்டது. அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புக்களின் எண்ணிக்கை **2166** ஆகும். இது சென்ற ஆண்டில் **1925** ஆக இருந்துள்ளது

**2. இறப்பு விபரம் :–**

துப்புரவு ஆய்வர்கள் பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் வேலைகளையும் இவைகளுக்கான சான்றிதழ்கள் நகல் எடுத்து வழங்குதல் பணிகளையும் கவனித்து வருகிறார்கள். அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த இறப்பு எண்ணிக்கை **322** ஆகும்.

அறிக்கையாண்டில் இறப்பு விபரம்

| வ. எண் | வியாதிகளின் பெயர்கள் | 2017-2018 | 2018-2019 | 2019-2020 | 2020-2021 | 2021-2022 | 2022-2023 | 2023-2024 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சுவாச சம்பந்தமான வியாதிகள் | 4 | 4 | 6 | 5 | 5 | 6 | |
| 2. | வயிற்றுப் போக்கு | - | - | - | - | - | - | |
| 3. | இதர வியாதிகள் | 3 | 3 | 5 | 12 | 13 | 25 | |
| 4. | சீதபேதி, வெரிநாய்க்கடி, மலேரியா, காலரா, இன்புருன்சா, பெரியம்மை, இதர நோய்கள் பிளேக், இதய நோய் | - | - | - | - | - | - | |
| 5. | விபத்து மற்றும் காயம் | 18 | 16 | 21 | - | 12 | 07 | |
| 6. | ஆஸ்துமா | - | - | - | - | - | - | |
| | மொத்தம் | **25** | **23** | **32** | **17** | **30** | **30** | |

3. கொசு தடுப்பு :–

அறிக்கையாண்டில் கொசு மருந்து தெளிப்பதற்கும் புகைமருந்து அடிப்பதற்கும் தேவையான பணியாளர்கள் இப்பணியில் ஈடுபட்டிருந்தார்கள். இப்பணியிடம் 1950– ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட பதவிகளாகும். கொசு புழு தடுப்புக்காக Fenthion 82.5% என்ற மருந்து உபயோகப்படுத்தப்படுகிறது.

நகராட்சியில், நிர்வாகம் பொதுசுகாதாரம் குடிநீர் விநியோகம் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பாதாளசாக்கடை பராமரிப்பிற்கு பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனம் விபரம்

நிர்வாகம்– பொதுபணிகள்

1. ஈப்பு வாகனம் – 3

2.குடிநீர் லாரி– 2

3.தெருவிளக்கு பராமரிப்பு வாகனம்–2

4.பாதாளசாக்கடை பராமரிப்பு வாகனம்–

4. பொதுசுகாதாரம் பயன்பாட்டிற்கு

| | | | |
|---|---|---|---|
| 1 | டிப்பர் லாரி (Mini) | : | 2 |
| 2 | TATA AC Auto (LCV) | : | 11 |
| 3 | காம்பாக்டர் லாரி | : | 2 |
| 4 | TATA AC Auto (Dog Catching) | : | 1 |
| 5 | Front & Loader- | : | 1 |
| 6 | குடிநீர் விநியோகம் பணிக்காக டேங்கர் லாரி | : | 2 |
| | JCB | : | 1 |
| | BOV | : | 26 |
| 7 | தெருவிளக்கு பராமரிப்பு Lader | : | 1 |
| 8 | UGD Jet Rodding | : | 1 |
| 9 | UGD Desilting Auto | : | 2 |
| 10 | தள்ளுவண்டிகள் | : | 48 |

5. கழிப்பிட வசதிகள் விபரம் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | கட்டண கழிப்பிடம் | : | 5 |
| 2. | மகளிர் பொது சுகாதார வளாகம் | : | 28 |
| 3 | சிறுநீர் கழிப்பிடம் | : | 2 |

**6. கொசு தடுப்பு நடவடிக்கை**

இந்நகராட்சியின் அனைத்து வார்டு பகுதிகளிலும் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகமல் இருக்க தொடர்ந்து கண்காணிக்கப்படுவதுடன் தினசரி கொசுமருந்து அடிக்கப்படுகிறது. கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களான கழிவுநீர் வாய்கால் மற்றும் மழைநீர் வாய்க்கால் ஆகியவற்றில் நீர் தேங்காமல் இருப்பதற்கு தொடர்ந்து சுத்தம் செய்யப்பட்டு கிருமிபிளிச்சிங் பவுடர் தெளிக்கப்படுகின்றன.

**7. டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு**

பொதுசுகாதார பணியின் அன்றாட பணிகளுடன் முக்கிய அங்கமான டெங்குகாய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைக்காக பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ADS கொசுப்புழுக்கள் உற்பத்தியாகமல் இருப்பதற்கு வீடுகள் தோறும் களப்பணியாளர்கள் துப்புரவு பணியாளர்கள் சென்று தினசரி கொசுப்புழுக்களை அழிக்க அபேட் மருந்துகள் தெளிக்கின்றனர்.
- பள்ளி கல்லூரி மாணவர்களை கொண்டு டெங்குகாய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. மேலும் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க பள்ளி மாணவ மாணவியற்கும், பொதுமக்களுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.
- நகரின் 21 வார்டு பகுதியிலும் ADS கொசுப்புழுக்கள் உற்பத்தியாவதை கட்டுப்படுத்தும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான Door Slip ஒட்டப்பட்டது.
- பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடங்களான புதிய பேருந்து நிலையம், உழவர் சந்தை பழைய பேருந்து நிலையம், அரணாரை, துறைமங்கலம், காமராஜர் வளைவு, அரசு மருத்துவமனை நகர்புற மருத்துவமனை வார்டு பகுதியில் முக்கியமான இடங்கள் மற்றும் பள்ளிகள் கல்லூரிகள் அனைத்து இடங்களிலும் நிலவேம்பு கசாயம் குடிநீர் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.
- டெங்குகாய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைக்காக 21 வார்டு பகுதிகளுக்கும் குழு அமைக்கப்பட்டு முதல்நிலை அலுவலர், இரண்டாம் நிலை அலுவலர்கள் மூலமாக

களப்பணி மேற்கொள்ளும் பணியாளர்களை கண்காணித்து டெங்கு ஒழிப்பு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், காலிமனைகளில் உள்ள முட்புதர்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

**8. பிளாஸ்டிக் கழிவுகள்**

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தினசரி சேகரம் செய்யப்படும் மறுசுழற்சிக்கு பயன்படாத நெகிழி கழிவுகள் அனைத்தும் இறுதியாக்கம் செய்யும் பணிக்கு தினசரி அரியலூர் மாவட்டம் ரெட்டிபாளையத்தில் அமைந்துள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் மற்றும் டால்மியா சிமெண்ட் ஆலை நிறுவனத்திற்கு இந்நகராட்சி வாகனம் மூலமாக கொண்டு சேர்க்கப்படுகிறது. இந்த பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கு எரியூட்டு பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

**9. உணவு விடுதிகள் கழிவு**

இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதியில் அமைந்துள்ள முக்கிய உணவுவிடுதிகளில் சேகரிக்கப்படும் உணவு கழிவுகள் மற்றும் காய்கறிகளை கொண்டு எரிவாயு உற்பத்தி செய்யப்பட்டு அதன்மூலம் மின்சாரம் தயாரிக்கப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மின்மோட்டர் இயக்குவதற்கு (STP) பயன்படுத்தப்படுகிறது.

**10. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்**

பெரம்பலூர் 2–ம் நிலை நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் (மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள்) 2000 கீழ் நகராட்சிப் பகுதியில் உள்ள குப்பைகளை கீழ்காணும் வகையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் உள்ளது.

1. வீடு வீடாகச் சென்று, தள்ளு வண்டியில் சுய உதவிக் குழுக்கள் வழியாக குப்பைகளை பிரித்து வாங்கும் பணி நடைமுறையில் உள்ளது.
2. நுண்ணிய கலவை உரக்கிடங்கு மையம் (MCC) இந்நகராட்சியில் புதிய பேருந்துநிலையம் அருகில் ரூ.51,39 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது.
3. தளத்தில் கலப்பு உரம் தயாரித்தல் (OCC) இந்நகராட்சியில் 3 எண்ணிக்கையில் உள்ளது.
4. நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளிலிருந்து மறுசுழற்சிக்கு பயன்படகூடிய பிளாஸ்டிக் கழிவுகள் தனியாக பிரிக்கப்பட்டு அவற்றினை விற்பனை செய்து அதன் தொகை துப்புரவு பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்படுகின்றன.

5. மறுசுழற்சிக்கு பயன்படுத்த இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனம் அரியலூருக்கு எரியூட்டு பொருளாக பயன்படுத்துவதற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
6. திடக்கழிவு மேலாண்மை பயணாளர் கட்டணம் அனைத்து வரிவிதிப்புதாரர்களுக்கும் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. அறிக்கை ஆண்டில் 32.57 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**11. ஆரம்ப கட்ட சேகரிப்பு**

நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளிலும், 48 தள்ளுவண்டிகளில் வீடு வீடாக மகளிர் சுயஉதவிக்குழுவினரால் குப்பை சேகரம் செய்யப்படுகிறது. இவையன்றி, மருத்துவமனைகள், திருமண மண்டபங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், சாலைகள் மற்றும் தெருக்களில் சேகரமாகும் குப்பைகளை நகராட்சி துப்புரவு பணியாளர்களால் தினசரி சுத்தம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

அறிக்கையாண்டில் திட்டப்பணிகள் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகள் விபரம்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 15-வது நிதிக்குழு திட்டம் (2021-22) 983 புதிய தெரு விளக்குகள் | 1 | 136.02 | 136.02 |
| 2 | 15-வது மத்திய நிதிக்குழு மாண்யம் 2022-2023 (சாலை பணிகள்) | 4 | 66.30 | 66.30 |
| 3 | (NSMT 2022-2023) நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் | 35 | 167.00 | 167.00 |
| 4 | 15-வது நிதிக்குழு மான்யம் 2022-2023 (குடிநிர் விநியோகம்) | 1 | 79.33 | 66.06 |
| 5 | திடக்கழிவு மேலாண்மை திட்டம்வளமீட்பு மையம் அமைக்கும்பணி MRF | 1 | 43.00 | 31.00 |
| 6 | (NNT 2022-2023) நமக்கு நாமே திட்டம் - 2022-2023 | 6 | 35.75 | 35.75 |
| 7 | (NSMT -2023-2024) நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் | 25 | 178.00 | 178.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | ($15^{th}$ CFC – 2023-2024) 15வது நிதிக்குழு மாண்யம் 2023-2024 | 6 | 100.00 | 100.00 |
| 9 | 5வது நிதிக்கு குழு மாண்யம் மற்றும் 6வது நிதிக்குழு மாண்யம் வேறுவாட்டு நிதி 2023-2024 | 6 | 107.00 | 107.00 |
| 10 | மாநில நிதிக்குழு மாண்யம் நிலுவை தொகை 2023-2024 | 49 | 467.00 | 407.00 |
| 11 | AMRUT 2.O பூங்கா அமைத்தல் மற்றும் விளக்கு அமைக்கும் பணி | 2 | 35.00 | 29.00 |

**2023–2024 மற்றும் 2024–2025 –ம் ஆண்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நடைபெற்றுவரும் / முன்னேற்றத்தில் உள்ள பணிகள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பாராளுமன்ற உறுப்பின் தெரு மேம்பாட்டு திட்டம் - 2023-2024 நியாய விலை கடை மற்றும் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 2 | 36.00 | 0 |
| 2 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2022-2023 சிமெண்ட் சாலை மற்றும் தார்சாலைகள் அனுமதித்தல் | 2 | 12.60 | 0 |
| 3 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-2024 தெருவிளக்கு அமைத்தல் | 4 | 40.00 | 0 |

17. முடிவுரை :–

இந்நகர மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர் வசதி, பொது சுகாதார வசதி மற்றும் தெரு மின் விளக்கு வசதிகள் அனைத்தையும் இந்நகராட்சி செய்து வருகிறது. நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியால் அனுப்பப்படும் கருத்துக்களை ஏற்று அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்த தஞ்சாவூர், மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கும், இந்நகராட்சியின் வளர்ச்சி பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளித்த பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்நகராட்சியின் முன்னேற்ற திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்து வரும் தமிழக அரசுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

அனைத்துப் பணிகளும் துரிதமாகவும், செம்மையாகவும் நடைபெற உறுதுணையாக பணிபுரிந்த அனைத்து உள் மற்றும் வெளி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறி இவ்வறிக்கையினை முடிக்கிறேன்.

ஆணையாளர்,
பெரம்பலூர் நகராட்சி.